RTJ

# நவம்பர் மாதத் திருப்புதல் தேர்வு – 2021

**10** – ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.15 மணி

மதிப்பெண்கள் : 50

*குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைய வேண்டும். 2) 21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 3) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.*

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 8 X 1 = 8

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2. மொத்த அணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெருங்காப்பியங்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

3. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

4. தென்னன் என்ற சொல் உணர்த்தும் மன்னன்
அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

5. வடலி
அ) மா ஆ) தென்னை இ) பனை ஈ) கத்தரி

6. செந்தமிழ் - இலக்கணக் குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

*செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை,*
*எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?*

7. தமிழ் எவ்வாறானது?
8. தமிழ் பெருமையை எடுத்துரைப்பது எது?

### பகுதி - II (பிரிவு - 1)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2 X 2 = 4

9. மன்னும் சிலம்பே! மணியே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
10. எவை அமர்வதால் காய்கள் கெடுகின்றன?
11. உயிர் எழுத்துகளில் நெட்டெழுத்துகள் யாவை?
12. விடைக்கேற்ற வினாவாக மாற்றுக.
தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகையாக அமையும்.

### (பிரிவு - 2)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 4 X 1 = 4

13. பழனம் - பொருள் தருக.
14. Monolingual - கலைச்சொல் அறிக.
15. நேற்று என்னைச் சந்தித்தார் அவர் என் நண்பர் - வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
16. உதயசங்கர் எழுதிய நூலின் பெயர் யாது?



Scanned with CamScanner

பகுதி - III (பிரிவு - 1)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 3 X 2 = 6

17. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது - இதுபோல் பயிர் வகை ஐந்தின் பெயரைத் தொடர்களில் அமைக்க.

18. பிஞ்சு வகைகளுக்கான சான்றுகளைத் தொகுத்து எழுதுக.

19. மக்களின் மதிநுட்பமும் பண்பாடும் யாது?

20. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாக தமிழ்மொழியில் தான் மொழி பெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுந்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

1. போர்ச்சுகல் நாட்டின் தலைநகர் எது?
2. 1554 இல் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நூலின் பெயர் என்ன?
3. கார்டிலா எவ்வரி வடிவத்தில் அச்சிடப்பட்டுள்ளது?

பிரிவு - 2

21. அன்னை மொழியே எனத் தொடங்கும் கவிதைப்பேழைப் பாடலை அடிமாறாமல் எழுதுக. 4

பிரிவு - 3

**ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 3

22. 'வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமான வேறுபாடுகளை எழுதுக.


பகுதி - IV (பிரிவு - 1)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 4 X 4 = 16

24. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்தினாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. ***(அல்லது)***
தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

25. தேனும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிரிவுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே - ***பாடலைப் படித்து நயம் பாராட்டுக.***

26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



27. ***மொழிபெயர்க்க.***

It you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going.

பகுதி - V

**கட்டுரை வரைக.** 5

28. சான்றோர் வளர்த்த தமிழ் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.



Scanned with CamScanner

நவம்பர் மாதத் திருப்புதல் தேர்வு -2021, தஞ்சாவூர் மாவட்டம்.

பத்தாம் வகுப்பு - தமிழ் விடைக்குறிப்பு

பகுதி -1

1) இ - எம்+ தமிழ்+ நா

2) ஈ - வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

3) ஈ - பாடல் ; கேட்டவர்

4) இ- பாண்டியன்

5) இ - பனை

6) அ - பண்புத்தொகை

7) தமிழ் செம்மையானது, உள்ளுயிராய் இருப்பது.

8) தமிழின் பெருமையை எடுத்துரைப்பது நா.

9) சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

10) கோட்டான் அமர்வதால் காய்கள் கெடுகின்றன.

11) ஆ, ஈ, ஊ, ஐ,, ஏ, ஓ, ஔ

12) மூவகை மொழிகள் யாவை ?

13) வயல்கள்

14) ஒரு மொழி

15) நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

16) பச்சை நிழல்.

பகுதி -3

17) கத்திரி நாற்று வாங்கச் சென்றேன், என் வீட்டில் வாழைக்கன்று நட்டு வைத்தேன்.
திருமணத் தாம்பூலத்தோடு மாங்கன்று தந்தனர். வீட்டில் தென்னம்பிள்ளை நடலாம்.

18) பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு ; பிஞ்சு - இளங்காய், வடு - மாம்பிஞ்சு, மூசு - பலாப்பிஞ்சு, கவ்வை - எள்பிஞ்சு, குரும்பை - தென்னை, பனையின் இளம்பிஞ்சு, கச்சல் - வாழைப்பிஞ்சு , நுழாய் - இளம்பாக்கு.

19 ) பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

20) 1. விசுபன்

2. கார்டிலா

3. ரோமன் வரிவடிவில்

21) அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !

முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே !

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்

மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே !

தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !

இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !

22) வேங்கை என்பது தனித்துநின்று மரத்தையும் , வேம் + கை எனப்பிரிந்து வேகின்ற கை என்று பொருள் தருவதால் பொதுமொழி.

23) தொழிற்பெயர் : காலம் காட்டாது, படர்க்கைக்கே உரியது, சான்று : நடத்தல்.

வினையாலணையும் பெயர் : காலம் காட்டும் ; மூவிடத்திற்கும் உரியது, சான்று : நடத்தவர்.

பகுதி -4

24) மனோன்மணீயம் சுந்தரனார் பாடல் :

கடலெனும் ஆடை உடுத்திய நிலமெனும் பெண்ணுக்குப் பரதகண்டம் முகமாகத் திகழ்கிறது. - அக்கண்டத்தில் தென்னாடும் அதில் சிறந்து விளங்கும் திராவிட நாடும் பிறை போன்ற நெற்றியாகவும் அதில் இடப்பட்ட திலகமாகவும் திகழ்கின்றன.

தமிழ்த்தாய் வாழ்த்து :

அழகாய் அமைந்த செந்தமிழ் - பழமைக்குப் பழமையாய் தோன்றிய நறுங்கனி - குமரிக் கண்டத்தில் நிலைத்து நின்று அரசாண்ட மொழி - பாண்டிய மன்னனின் மகளாய் விளங்கும் மொழி - திருக்குறளில் பெருமையே, ஐம்பெருங்காப்பியங்களாகத் திகழும் மொழி - போன்ற பல பெருமைகள்.

( அல்லது)

தமிழ்மொழியில் நேரடியாக எழுதப்படும் நூல்களுக்கு இணையாக மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்திய மொழிகளிலிருந்து நேரடியாக இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தின் வழியாக உலகம் முழுவதும் உள்ள பல மொழிகளில் வெளிவந்த பல துறைகளைச் சார்ந்த நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

இவை போன்ற பிற கருத்துகள்

25) திரண்ட கருத்து : தமிழ்மொழி தேனைவிட இனிமையானது. செம்மையான மொழி. தென்னாடு நன்கு விளக்கமுறத் திகழ்ந்த தென்மொழி. எங்கள் உடம்பிலும் ஒளிரும் ஒண்மைத் தமிழ்.

மோனை : தேனும், தென்னாடு. தே - மோனை

ஊனினும், உணர்வினுக்

எதுகை : தேனினும், இனிய. - னி - எதுகை.

26) அறிவு எனும் பூட்டைத் திறக்க

நல்ல புத்தகம் எனும் சாவி தேவை

பூட்டிய அறிவின் திறவுகோல்

கல்வியே.

27) ஒருவன் புரிந்து கொள்ளும் மொழியில் பேசினால் அது அவனுடைய அறிவுக்குள் செல்லும். அவனுக்கு உரிய தாய்மொழியில் பேசினால் அது அவனுடைய மனத்திற்குள் செல்லும்.

28) முன்னுரை

பொருளுரை

முடிவுரை.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

தி.ஆ.மேனிலைப்பள்ளி, திருவிடைமருதூர். செல் - 9443740120